செ.வெ.எண்.282/2009/செமதொஅ நாள்: 07.09.2009

**தாமல் ஊராட்சியில் ரூ.6 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய ஊராட்சி மன்றக் கட்டடத்தை திறந்து வைத்து, 30 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் வழங்கினார்.**

காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், தாமல் ஊராட்சியில் ரூ.6 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலக கட்டட திறப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு புதிய கட்டடத்தை திறந்து வைத்து 30 குடும்பங்களுக்கு ரூ.3 இலட்சம் மதிப்பிலான இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி விழா பேருரையாற்றினார்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றப்பின் அனைத்து துறைகளிலும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. தாமல் பகுதியில் உள்ள மக்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தார்கள். பாலாற்றில் இருந்து இப்பகுதிக்கு குடிநீர் வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்தார்கள். அதற்கு ரூ.22 இலட்சம் செலவாகும் என திட்டமிடப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.15 இலட்சம் நிதி வழங்கியுள்ளார். மீதமுள்ள தொகை ரூ.7 இலட்சத்தை காஞ்சிபுரம் ஒன்றியக்குழுத் தலைவர் அவரது பொது நிதியிலிருந்து வழங்கி உள்ளார். எனவே, விரைவில் இப்பகுதிக்கு குடிநீர் வசதி செய்து தரப்படும். இந்த பகுதியில் உள்ள பெரிய ஏரியினை தூர் வார வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை மனு அளித்துள்ளனர். இந்த ஆண்டு இறுதிக்குள் அந்த ஏரி தூர்வாரப்படும். ஓச்சேரி வரவுக்கால்வாயினை தூர்வாரி மேம்படுத்த அரசு ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது. அந்த பணிகள் விரைவில் நடைபெறவுள்ளது.

நகர்புறத்தில் வாழும் மக்களைப் போல கிராம மக்களும் அனைத்து அடிப்படை வசதிகளையும் பெற்று வாழ வேண்டும் என்ற நோக்கத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் கொண்டு வரப்பட்ட சிறப்பான திட்டம் தான் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் ஆகும். தமிழகத்தில் 12500 கிராம ஊராட்சிகள் உள்ளன. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் 3000 கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு ஒவ்வொரு ஊராட்சிக்கும் தலா ரூ.20 இலட்சம் நிதிஒதுக்கீடு வழங்கப்பட்டு சிமெண்ட் சாலை, சோடியம் ஆவிவிளக்கு, நூலகம், குடிநீர்வசதி, பூங்கா, மயானம் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகிறது. இதுவரை 9000 ஊராட்சிகளுக்கு தலா ரூ.20 இலட்சம் வழங்கப்பட்டு கட்டமைப்பு பணிகளில் ஊராட்சிகள் தன்னிறைவு கண்டுள்ளன.

மக்களின் தேவைகளை அறிந்து அதனை நிறைவேற்றுகின்ற அரசு கலைஞரின் அரசு. தமிழகம் முழுவதும் 7.5 லட்சம் குடும்பங்களுக்கு வீட்டுமனைப்பட்டாக்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் மட்டும் 47 ஆயிரம் குடும்பங்களுக்கு ரூ.800 கோடி மதிப்பிலான வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த கால ஆட்சியில் போடப்பட்ட பணிநியமன தடை ஆணையால் தமிழகம் முழுவதும் 3.5 இலட்சம் அரசு பணியிடங்கள் காலியாக இருந்தன. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தடையாணை நீக்கப்பட்டு 3.5 இலட்சம் அரசுப்பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. ஏழை-எளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூதாயத்தை சேர்ந்த மக்கள் பசியார உணவு உண்ண வேண்டும் என்பதற்காகவே ஒரு ரூபாய்க்கு 1 கிலோ அரிசி வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்தார். இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் இத்திட்டம் மிகச்சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலேயே காஞ்சிபுரம் மாவட்டத்தில் தான் மாநில நெடுஞ்சாலைகளும், ஊராட்சி ஒன்றியச் சாலைகளும், கிராமச் சாலைகளும் சிறப்பாக போடப்பட்டுள்ளன. தமிழகம் முழுவதும் இதுபோன்ற சாலைப் பணிகளும், புதிய மேம்பாலங்களும் கட்டப்பட்டு திறக்கப்பட்டு வருகின்றன என தெரிவித்தார்.

விழாவில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பெ.விஸ்வநாதன் முன்னிலையுரையாற்றினார். காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர் திரு.பி.எம்.குமார் ஆகியோர் தலைமையுரையாற்றினார். மாவட்ட நுகர்பொருள் வாணிக கழக இயக்குநர் திரு.டி.பி.முருகேசன், மாநில கைத்தறி ஆலோசனைக்குழு உறுப்பினர் திரு.சி.வி.எம்.அ.பொன்மொழி, மாவட்ட தொலைபேசி ஆலோசனைக்குழு உறுப்பினர் திரு.சன்பிராண்ட்.ஆறுமுகம், மாவட்ட கைத்தறி ஆலோசனைக்குழு உறுப்பினர் திரு.சி.வி.எம்.அ.சேகர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் தாமல் ஊராட்சி மன்றத்தலைவர் திரு.சா.எத்திராஜ் வரவேற்றார். முடிவில் ஊராட்சி உதவியாளர் சா.எ.குமார் நன்றி கூறினார். மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் திரு.எ.அசோகன், திரு.கோ.சுந்தரம், ஒன்றியக்குழு உறுப்பினர் திரு.எ.வெங்கடேசன், ஊராட்சி மன்ற துணைத்தலைவர் திரு.து.கிருஷ்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.கே.எம்.ரகுராமன், திரு.கே.குமாரசாமி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

செய்தி வெளியிடுபவர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.